# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1959/7 - 2016 මාර්තු මස 21 වැනි සඳුදා - 2016.03.21

*1959/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மேல் மாகாண மாகாண சபை**

***1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் சம்பந்தமாக நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் நடத்தப்படுகின்ற விசாரணை***

*மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டமும் ஒழுங்கும் உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் சக்திவலு, சூழல் விவகாரங்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் இசுர தேவப்பிரிய ஆகிய நான், மேல் மகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டம் 2(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கேற்ப எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயம்/ குற்றச்சாட்டு காரணமாகக் கொண்டு, டபிள்யூ. சமன்லால் பெர்னாந்து மொறட்டுவ மாநகர சபையின் மேயராகச் செயற்படும் போது மேற்குறிப்பிட்ட நியதிச் சட்டத்தில் 2 (1) ஆம் பிரிவின் கீழ் காட்டப்படுகின்ற பிழைகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை விசாரித்து 3 மாதங்களினுள் அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது தொடர்பாக ஒரு நபரைக் கொண்ட விசாரணைச் சபையொன்றாக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குமார ஹேவகே சுமத்திரபால அவர்களை நியமிக்கின்றேன்.*

**விசாரணை செய்ய வேண்டிய விடயம்/குற்றச்சாட்டுகள்** :

*1. நீங்கள் மொறட்டுவை மாநகர சபையில் மேயராகச் செயற்படும் போது, 2015.11.14 ஆந் திகதியில் இருந்து 2015.12.07 ஆந் திகதி வரையான கால எல்லைக்குள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லைக்குள் மொறட்டுவ மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் வரும் ராவத்தாவத்த மயானத்தில் அமைந்துள்ள தேக்கு மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மொறட்டுவ மாநகர சபையின் முறையான உடன்பாடு இன்றி அனுமதி வழங்கியதில் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) மற்றும்/அல்லது 2 (1) (ஈ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள தவறான செயல்கள் செய்யப்பட்டுள்ளன.*

*2. நீங்கள் மொறட்டுவ மாநகர சபையில் மேயராகச் செயற்படும் போது, மொறட்டுவ மாநகர சபை வளாகத்தில் பாதுகாப்புச் சேவை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக முறையான சபை உடன்பாடு இன்றியும்/அல்லது ஒப்பந்தம் சபை அனுமதி இன்றி இரத்தினபுரி மற்றும் பள்ளி வீதி, 26/1/1/W. E பாதுகாப்புச் சேவை தனியார் கம்பனியுடன் ஒப்பந்தத்திற்கு உட்படுவதற்கு செயற்பட்டதனால் மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) அ மற்றும் அல்லது 2(1) (ஈ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட தவறான செயல்கள் செய்யப்பட்டுள்ளன.*

3. நீங்கள் மொறட்டுவ மாநகர சபையில் மேயராகச் செயற்படும் போது, 2009.07.10 முதல் 2010.07.30 ஆந் திகதிக்கிடையிலான கால எல்லைக்குள் அல்லது அதற்கு அண்மித்த கால எல்லைக்குள் மொறட்டுவ, புகையிரத நிலைய வீதி, இல. 163/ஏ ஆகிய இடத்தில் செயற்பட்டுள்ள அத்துமீறிய கட்டிடங்களை நீக்குதல் தொடர்பாக தரப்பட்ட நீதிமன்றக் கட்டளையை செய்யாமையினால் மற்றும்/அல்லது செயற்படுத்துவதற்கு முடியாத வகையில் நடவடிக்கை செய்தமையால் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (1) (அ) மற்றும்/அல்லது 2 (1) (ஈ) பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட தவறான செயல்கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவில் மேலும் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கேற்ப விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளருக்கு உரிய அதிகாரம் இந்த ஒரு தனி நபர் விசாரணை சபைக்கு உரித்தாவதுடன் மேற்குறிப்பிட்ட விடயங்களை விசாரிக்கும் போது, உரியதாக்கிக் கொள்ளும்படிக்கு இனங்காணப்பட்டுள்ள எழுத்து மூலமும் வாய் மூலமுமான சாட்சி கீழ் அட்டவணைக்கு உட்படுத்தியுள்ளதாக மேலும் அறிவிப்பதில் விரும்புகின்றேன்.

இசுர தேவப்பிரிய,
மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும்
திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டமும் ஒழுங்கும்,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார
மேம்பாடு, மின்வலு மற்றும் சக்தி வலு, சூழல் விவகாரங்கள்,
நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை
விவகாரங்கள் தொடர்பான அமைச்சர்.

மேல் மாகாண முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 07,
2016, மாச்சு 16.

**அட்டவணை**

1. மொறட்டுவ மாநகர சபையின் மாநகர ஆணையாளர், இரத்தினபுரி பள்ளிவீதி 26/1/1/W. E பாதுகாப்புச் சேவை தனியார் கம்பனியின் பிரதான முகாமையாளர் தொடர்பு கொண்ட இலக்கம் மொ/26/1/W. E. பாதுகாப்புச் சேவை தனியார் கம்பனியுடன் மோ/ஆ/7/17/2015- 1 மற்றும் 2015.12.21 ஆந் திகதிய கடிதத்தின் அலுவலகப் பிரதி.

2. மொறட்டுவ மாநகர சபையின் பாதுகாப்புச் சேவை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக W. E பாதுகாப்புச் சேவை தனியார் கம்பனியுடன் மொறட்டுவ மாநகர சபையுடன் செய்யப்பட்டுள்ள 2015.12.21 ஆந் திகதியுள்ள ஒப்பந்தம்.

3. 2015- 2016 ஆகிய வருடங்கள் தொடர்பாக பாதுகாப்புச் சேவை வழங்குவதற்குரிய டென்டர் தொடர்பாக 2015.12.17 ஆந் திகதியுடைய கணிப்பீட்டுப் பத்திர அறிக்கை.

4. மொறட்டுவ மாநகர சபையின் நகர ஆணையாளர், மேயர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2015- 2016 ஆம் ஆண்டு மொறட்டுவ மாநகர சபையின் தனியார் பாதுகாப்புச் சேவை டென்டர் தொடர்பாக இங்குள்ள 2015.12.15 ஆந் திகதியுள்ள அறிக்கை.

5. உள்ளூராட்சி ஆணையாளர் (மே. மா) மொறட்டுவ மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு தொடர்புகொண்ட இலக்கம் : LGD/6/5 /M03/2015/ii தொகுதி மற்றும் 2015. 11.24 ஆந் திகதியுள்ள கோவைப் பிரதி.

6. மொறட்டுவ மாநகர சபையின் பிரதி நகர ஆணையாளர் மூலம் 2015.08.03 ஆந் திகதியுள்ள நிறுவன குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட "கீழ்விடயம் தொடர்பாக கவனித்துப் பார்த்தல்" இதில் ஆரம்பமாகும் மொ/ஆ7/17/2015- 16 ஆம் கோவையின் 74 அவ்வாறு உட்பட்ட அறிக்கை.

7. மொறட்டுவ மாநகர சபையின் மொ/ஆ7/17/2015- 16 ஆகிய பாதுகாப்புச் சேவை வழங்குதல் 2015- 2016 ஆகிய கோவைகள்.

8. மொறட்டுவ மாநகர சபையின் பாதுகாப்புச் சேவை தொடர்பாக விலைமனுக்கள் கோருவதற்கு உரிய 2015.09.08 ஆந் திகதியுள்ள தினமின பத்திரிகை அறிவித்தல்.

9. மொறட்டுவ மாநகர சபையின் உற்பத்தித் திறன் குழு அறிக்கை 2013.10.11 மற்றும் அதற்கு அடிப்படையாகவுள்ள ராவத்தாவத்த மயானத்தில் நல்ல நிலையில் மற்றும் உக்கிப்போன தேக்குமரங்கள் தொடர்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் குறிப்பு அடங்கிய அறிக்கை.

10. மொறட்டுவ மாநகர சபையின் முதல்வர் மொறட்டுவ மாநகர சபை மாநகர பொறியியலாளருக்கு 2015.12.07 ஆந் திகதியில் அனுப்பியுள்ள அறிவுறுத்தல் உட்பட்ட அட்டவணை.

*11.* இலக்கம் : நகபொதி/திகதி 04/DL/47/2015 ஆகிய கோவையின் 4 ஆவதாக உள்ள அறிக்கை.

*12.* மொறட்டுவ மாநகர சபையின் ராவத்தாவத்த மயானத்தில் தேக்கு மரம் வெட்டுதல் இங்குள்ள நபொதி/திக04/DL/47/2015 ஆகிய கோவை.

*13.* மொறட்டுவ பிரதேச செயலாளர் மொறட்டுவ மாநகர சபையின் நகர ஆணையாளர் தொடர்பு கொண்ட 2015.12.17 ஆந் திகதியுடைய கடிதம்.

*14.* மொறட்டுவ மாநகர சபையின் இலக்கம் தி/04/அமீ/கட்/30B/2008 ஆகிய கோவை

*15.* மொறட்டுவ மாநகர சயையின் நகர ஆணையாளர் மூலம் மாநகர சபை உறுப்பினர் தம்மிக்க சந்திரநாத் அவர்களால் தொடர்பு கொண்ட இலக்கம் தி/04/அமீ/கட் 30 B/2008 மற்றும் 2009. 11.19 ஆந் திகதியுடைய கடிதம்.

*16.* நீதிவான் நீதிமன்ற இலக்கம் 90471 ஆகிய வழக்கின் கோவை.

*17.* நகர அபிவிருத்தி சபையின் மூலம் மொறட்டுவை மாநகர சபை அதிகாரப் பிரதேசம் தொடர்பாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரங்கள் குறித்தொதுக்குவதற்கு உரிய அட்டவணை.

நபர்களின் சாட்சி :

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். பீ. தெவரப்பெரும | - | பதில் மாநகர ஆணையாளர், மொறட்டுவ மாநகர சபை |
| 2. | திரு. டீ. எம். கருணாரத்ன | - | முன்னாள் நகர ஆணையாளர், மொறட்டுவ மாநகர சபை |
| 3. | மாநகரப் பொறியியலாளர் | - | மொறட்டுவ மாநகர சபை |
| 4. | திரு. எஸ். கே. ஜயசுந்தர | - | பிரதி மாநகர ஆணையாளர், மொறட்டுவ மாநகர சபை |
| 5. | மாநகர செயலாளர் | - | மொறட்டுவ மாநகர சபை |
| 6. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - | மொறட்டுவ மாநகர சபை |
| 7. | பிரதேச செயலாளர் | - | பிரதேச செயலாளர் அலுவலகம், மொறட்டுவ |
| 8. | திரு. வீ. பீ. வர்ணகுலசூரிய | - | முன்னாள் மாநகர ஆணையாளர் (மொறட்டுவ மாநகர சபை) |
| 9. | திரு. யூ. டீ. சீ. பர்ணாந்து | - | முன்னாள் மாநகர ஆணையாளர் (மொறட்டுவ மாநகர சபை) |
| 10. | பணிப்பாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி | - | மாநகர அபிவிருத்தி அதிகார சபை |
| 11. | திருமதி தம்மிகா பீ. ஹெட்டிஆரச்சி | - | நுண்ணாய்வு உத்தியோகத்தர் |
| 12. | திரு. டபிள்யூ. பத்மசிறி | - | நுண்ணாய்வு உத்தியோகத்தர் |
| 13. | திரு. கே. டபிள்யூ. எம். மஞ்ஜுல | - | நுண்ணாய்வு உத்தியோகத்தர். |

4- 430

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.